முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்

**முன்னிலை : திரு.R. நரசிம்ம மூர்த்தி, எல்.எல்.பி.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (கூடுதல் முழு பொறுப்பு)**

**சங்கரன்கோவில்.**

**2023ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.** 248/2016

CNR.No. TNTL1A00015820161.

1. கார்த்தீசன்
2. தங்கப்பாண்டி --- வாதிகள்

//எதிர்//

1. பிரேம்ராஜ்
2. அந்தோணி திரவியம்
3. முத்துப்பாண்டி
4. கோவிந்தன்
5. துக்கமுத்து

--- பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இன்று 27.04.2023ம் தேதியன்று என்முன்பு விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.அருண்குமார் அவர்கள் ஆஜராகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.E.டேனியல் பிரணாப் அவர்கள் ஆஜராகியும் உள்ள நிலையில், 3 முதல் 5ம் பிரதிவாதிகளை அழைத்தும் வருகை தராததால் தோன்றா தரப்பினராக கருதப்பட்ட நிலையில், வாதிகளை விசாரணை செய்வதற்கு போதிய கால அவகாசம் கொடுத்தும் வாதிகள் தரப்பில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினாலும். இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் பெயருக்கு 10.08.2016ல் மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1564/2016

என்ற எண்ணில் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல இல்லா நிலையது என்றும், மேற்படி கிரைய ஆவணம் பிராது தபசில் சொத்துக்களில் வாதிகளின் உரிமையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக் கூடியதில்லை எனவும் ஒரு விளம்புகை பரிகாரம் வழங்கியும், தபசில் சொத்து வாதிகளுக்கு மட்டிலும் பாத்தியப்பட்டது எனவும் விளம்புகை செய்தும் அதனை அனுசரித்து தபசில் சொத்துக்களில் வாதியின் அனுபவத்தை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, முகவர்களோ, எவ்விதத்திலும் இடைஞ்சல்கள் எதுவும் செய்யவோ, வில்லங்க பாராதீனம் செய்யவோ கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கும் படிக்கும், மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகையை வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும் படிக்கும் கேட்டு வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1st plaintiff present. Already sufficient time granted. But the plaintiffs not commenced the trial. Hence this suit is dismissed for default. No costs.

2023 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27 ம் நாள் இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப்பகரப்பட்டது.

**/Sd/ – R.Narasimma Moorthi**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
சங்கரன்கோவில்.

**வாதினய் மற்றும் பிரதிவாதினய் தரப்பு**
**சாட்சிய, சான்றாவணங்கள்** :– **இல்லை**

**/Sd/ – R.Narasimma Moorthi**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC),
சங்கரன்கோவில்.